**இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்திட்டம் (ஐஐடிபி) 2013**

இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (ஐஐடிபி) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (ஐஎவ்ஏடி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 சனவரி 30 ஆந் திகதிய 1-857 ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் IX ஆம் உறுப்புரையின் 9.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் நிறைவேற்றல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின்படி, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வட மாகாண சபையின் மாகாண நீர்ப்பாசத் திணைக்களம் மற்றும் விவசாயத் திணைக்களம் என்பன அமுலாக்கல் முகவர்களாக உள்ளது. நீர்ப்பாசன உட்கட்டமைப்பின் வினைத்திறனான மற்றும் நிலைபேறான முகாமைத்துவத்தை மேம்படுத்துவதும் நீர் மற்றும் நில உற்பத்தி தன்மையின் நிலைபேறான முன்னேற்றத்தை அடைவதும் செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. நிதியளிப்பு உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 29.32 மில்லியனாக உள்ளதுடன் அதில் ஐ.அ.டொலர் 22.33 மில்லியன் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. ஐ.அ.டொலர் 3.16 மில்லியன் தொகையான மிகுதிக் கிரயம் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டியதுடன் ஐ.அ.டொலர் 1.23 மில்லியன் தனியார் துறையால் நிதியளிக்கப்பட வேண்டும். மேலும், ஐ.அ.டொலர் 2.7 மில்லியன் பயனாளிகளினால் நிதியளிக்கப்பட வேண்டும். செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 சனவரி 30 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2017 மார்ச் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 செயற்திட்டத்தின் பகுதிகள்

உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் கூறுகள் வாரியான நடவடிக்கைகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

கூறு 1: உட்கட்டமைப்பு அபிவிருத்தி

(அ) நீர்ப்பாசன உட்கட்டமைப்பு புனரமைப்பு

(ஆ) ஏனைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி

கூறு 2: உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்

(அ) சமூக தயார்ப்படுத்தலும் பயிற்சியும்

(ஆ) உற்பத்தி விரிவாக்கலும் சந்தைப்படுத்தலும்

(இ) வேறு விவசாய அபிவிருத்தி

கூறு 3: செயற்திட்ட முகாமைத்துவம்

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறள் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

---

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும்
செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்குகளிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததனவா என்பதும்

(ஏ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள்நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 335,244,373 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்று பின்வரும் கூற்று காட்டுகிறது.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 316,819,478 | - | 316,819,478 |
| வாகனங்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | 4,602,840 | - | 4,602,840 |
| ஆலோசனை சேவைகள் மற்றும் கற்கைகள் | 1,563,491 | - | 1,563,491 |
| பயிற்சி | 785,231 | - | 785,231 |
| சம்பளங்கள் மற்றும் படிகள் | 9,401,086 | 2,497,385 | 11,898,471 |
| செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவக் கிரயம் | 2,072,247 | 467,277 | 2,539,524 |
| **மொத்தம்** | **335,244,373** | **2,964,662** | **338,209,035** |

## 4.2 கட்டுநிதி நிதியக் கணக்குகள்

கிடைக்கப்பெற்ற தவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்குகளின் செயற்பாடுகள் மற்றும் 2013 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு அக்கணக்கில் இருந்த மீதிகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| | ரூபா |
|---|---|
| 2013 சனவரி 31 இல் உள்ளவாறான மீதி | இல்லை |
| கூட்டுக: | |
| மீள் நிரப்பல்கள் | 424,112,960 |
| கழி:- | |
| பற்றுதல்கள் | 335,244,373 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | 316,110 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 88,552,477 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடு

செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட நிதிகளில் ஒப்பந்தகாரரால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 942,204 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டுவதற்கு பதிலாக தவறுதலாக சிவில் வேலைகளின் கிரயத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**5.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய டிஎம்எஸ் 30 ஆம் இலக்க சுற்றறிக்கையில் செய்யப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக, நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்து செயற்திட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 846,000 தொகையான ஊக்குவிப்புகள் செலுத்தப்பட்டிருந்தது.

## 6. நிதி மற்றும் செய்றபாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டிய ஏற்பாடு மற்றும் உள்ளபடியான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **மூலம்** | **வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை** | | **2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு** | **ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள்** | **2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள்** | |
|---|---|---|---|---|---|---|
| | **யூ.எஸ். டொலர் மில்.** | **ரூபா. மில்** | **ரூபா. மில்** | **ரூபா. மில்** | **யூ.எஸ். டொலர் மில்.** | **ரூபா. மில்** |
| ஐஎவ்ஏடி | 22.23 | 2,890.0 | 350.0 | 300.3 | 2.31 | 300.3 |
| இலங்கை அரசாங்கம் | 3.16 | 410.0 | 125.0 | 34.94 | 0.31 | 37.9 |
| நலனாளிகளின் பங்களிப்பு | 2.70 | 351.0 | - | - | - | - |
| தனியார் துறை பங்குபற்றல் | 1.23 | 159.9 | - | - | - | - |
| **மொத்தம்** | **29.32** | **3,810.9** | **475.0** | **335.24** | **2.62** | **338.2** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 475 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில், ரூபா 335 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆண்டிற்காக செய்யப்பட்ட கூறுகள் வரியான ஒதுக்கீடுகளின் விபரங்கள் மற்றும் அதன் பயன்பாடுகள் கீழே தரப்படுகின்றது.

| **கூறு** | **2013 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை** | **2013 ஆம் ஆண்டிற்காக பயன்படுத்திய தொகை** | **பயன்பாட்டின் சதவீதம்** |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 422 | 317.85 | 24.68 |
| உற்பத்தி மற்றும் | 13 | 0.72 | 94.46 |

| | | | |
|---|---|---|---|
| சந்தைப்படுத்தல் | | | |
| செயற்திட்ட முகாமைத்துவக் கிரயம் | 40 | 16.67 | 58.33 |
| | 475 | 335.24 | 29.42 |

(ஆ) செயற்திட்டத்தின் குறித்த காலத்திற்குள் செயற்திட்ட நோக்கங்களின் அடைதலை உறுதிப்டுத்துவதற்கான நிர்ணயிக்கின்ற பொறுப்புக்களுடன் செயற்திட்டத்தின் முழுக்காலத்தையும் மேவி மாதாந்த, காலாண்டு, அரையாண்டு போன்றவற்றில் நிதி மற்றும் பௌதீக இலக்குகள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த விரிவான செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அத்தகைய திட்டம் தயாரித்து அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்டத்தின் ஆரம்ப நிதித் திட்டத்தின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக ரூபா 19,230,000 தொகை ஆலோசனை சேவைகளிற்காக ஒதுக்கப்பட்டது. எவ்வாறாயினும், சிவில் வேலைகளிற்கான ஆலோசனையாளர் 2013 திசெம்பர் 31 வரையும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.2 ஒப்பந்த நிர்வாகம்

(அ) கிளிநொச்சியில் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் அலுவலகத்திற்காக ரூபா 942,204 பெறுமதியான அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வற்கு வழங்குநரை தெரிவுசெய்வதற்கு கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 242,834 கிரயத்தில் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்காக கொள்வனவு செய்யப்பட்ட 02 நிறைவேற்றுனர் தரக் கதிரைகள் தெரிவுச்செவ்வை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 3,251,904 பெறுமதியான மேலதிக வேலைகளின் 37 விடயங்கள் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் கட்டிட திருத்தங்கள் மேற்கொள்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் முறையான அதிகாரம் இல்லாமல் அவற்றின் மீது கொடுப்பனவுகள் செய்யப்பட்டன.

(ஆ) மேலும், முறையான அதிகாரம் இல்லாமல் பரந்தன் நீர்ப்பாசனக் கால்வாய் புனரமைப்பிற்கான ஒப்பந்தத்தின் கீழ் ரூபா 8,595,595 பெறுமதியான மேலதிக வேலைகளின் 55 விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தது. கடுமையான வேலைகளிற்கு அவற்றின் மீது ரூபா 830,380 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் நீர்ப்பாசன முறைமைகளின் புதிதாக நீர்த்ததேக்கம் நிரப்படுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் வெளிப்பட்டது.

(இ) ரூபா 28,990,661 பெறுமதியான ஆர்பீ பிரதான வாய்க்கல் (பொதி-06) புனரமைப்பின் கீழ் செய்யப்பட்ட இடைக்காலக் கொடுப்பனவுகள் செய்யப்பட்ட வேலைகளின் அளவீட்டை செய்யாமல் செயற்திட்டத்தின் பொறியியலாளரால் சான்றுபடுத்தப்பட்டிருந்தது. ஆதலால், செயற்திட்ட நடவடிக்கைகளின் மேற்பார்வை திருப்திகரமற்று இருந்தது.

## 6.3 விதிவிலக்கான விடயங்கள்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தின் ரூபா 651,481 கூட்டு மொத்தத் தொகையான மின்சாரம் மற்றும் வாகன திருத்தங்கள் மீதான செலவினங்கள் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காக ஒதுக்கப்பட்ட பெறுகைகளில் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் சமூக நடமாடும் நடவடிக்கைகளிற்காக அரசசாற்பற்ற அமைப்புக்களின் அழைப்பிற்காக செயற்திட்டத்தால் ரூபா 72,912 தொகையான விளம்பரக் கட்டணங்கள் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அரச சாற்பற்ற அமைப்புக்கள் தெரிவு செய்யப்பட்டோ அல்லது 2013 திசெம்பர் 31 வரையும் சமூக நடமாடும் நோக்கங்களிற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டோ இருக்கவில்லை.